**செய்தி வெளியீடு எண்: 961** **நாள்: 28.12.2018**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் இன்று (28.12.2018) சென்னையில் நடைபெற்ற இந்தியா சிமெண்ட் நிறுவனத்தின் சார்பில் வெளியிடப்படும் Coffee Table Book நிகழ்ச்சியில் ஆற்றிய உரை**

இந்த இனிய விழாவில் பங்கேற்றுள்ள

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்களே,

Thiru. N.Srinivasan,
Tmt.Rupa Gurunath,
Senior Executives and Employees
of India Cements,
Thiru. Sunil Gavaskar ji,
Thiru. Kapil Dev ji,
Thiru. Rahul Dravid ji,
Thiru. M.S.Dhoni ji,
Thiru Chandu Borde ji,
Thiru G.R.Viswanath ji
Thiru Mahendra Singhi ji
Thiru P.R.Venketrama Raja ,
Captains of Industries,
Ms. Malavika Arora ji,
Ms. Kalyani Candade ji,
Tmt.Rupa Gurunath,

It gives me great pleasure to participate in this function for releasing a Coffee Table Book on the 7 decade growth journey of India Cements and the Company’s rich contribution for the development of sports and sports persons.

இந்தியா சிமெண்ட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. என்.சீனிவாசன் அவர்கள் 1945ஆம் ஆண்டு ஜனவரி மூன்றாம் தேதி

பிறந்தவர். 73 ஆண்டுகள் படிப்பிலும், உழைப்பிலும், அதிக கவனம் எடுத்துக் கொண்டதால் தான் இன்று இந்த உயரிய நிலையை அடைந்திருக்கின்றார். ‘இந்தியா சிமெண்ட்ஸ் சீனிவாசன்’ என்று அவரை நாம் அறிவது போலவே, சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் முன்னாள் தலைவர் என்றும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் முன்னாள் தலைவர் என்றும் அனைவரும் அறிவர். இதற்குக் காரணம், அவர் ஏற்றுக் கொண்ட பொறுப்புகளையெல்லாம் அவர் திறம்பட செய்து புகழ் பெற்றிருக்கிறார் என்பதுதான் உண்மை.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனும் சொல்.

என்ற வள்ளுவர் வாக்கின்படி, தந்தை திரு. டி.எஸ்.நாராயணசுவாமி அவர்களுக்கு நற்பெயரை பெற்றுக் கொடுக்கும் மகனாக திகழ்ந்து வருகிறார். திரு. சீனிவாசன் அவர்கள் தன் இளங்கலை பட்டப் படிப்பினை லயலோ கல்லூரியிலும், வேதியியல் துறையில் பொறியியல் மேற்படிப்பை அமெரிக்காவின் சிகாகோ நகரிலுள்ள தொழில் நுட்ப நிறுவனத்திலும் நிறைவு செய்திருக்கிறார். அவருடைய வேதியியல் கல்வி சிமெண்ட் ஆலையை திறம்பட நிர்வகிப்பதற்குப் பேருதவியாக இருந்திருக்கிறது. தந்தை திரு. டி.எஸ். நாராயணசாமி அவர்களால் தொடங்கப்பெற்ற இந்தியா சிமெண்ட் நிறுவனம் 70 ஆண்டுகளாக கடந்து வந்த வளர்ச்சி பாதைகளை விளக்கும் வகையில் இந்த Coffee Table Book வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் வளர்ச்சியில் திரு. சீனிவாசன் அவர்களின் பங்களிப்பு சுமார் 50 ஆண்டுகள் இருந்திருக்கிறது என்பதை இந்த புத்தகத்தின் வாயிலாக அறிய முடிகிறது. இது தவிர பொது வாழ்க்கையில் இவர் ஆற்றிய பணிகள் பற்றியும் இந்த புத்தகத்தில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

இன்று இந்த நிறுவனம், உலகத்தரத்துடன் ஒப்பிடும் அளவிற்கு ஒரு நிலையை எட்டுவதற்கு அவருடன் இணைந்து பணியாற்றிய உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் கடின உழைப்பும் காரணம் என்றால் மிகையாகாது.

ஒருவர் முதலாளியாக உயர்வதற்கு முன் சிறந்த தொழிலாளியாகப் பணியாற்றி இருக்க வேண்டும். அப்படி பணியாற்றியவர்கள் தான் பிற்காலத்தில் ஒரு சிறந்த முதலாளியாக உயர முடியும் என்பதற்கு திரு. என்.சீனிவாசன் அவர்களே முன்னுதாரணமாகத் திகழ்கிறார். ஒரு தொழில் அதிபராக வாழ்வில் முன்னேற துடிக்கும் இன்றைய இளைய சமுதாயத்திற்கு, இவர் ஒரு முன்மாதிரியான சாதனையாளராக திகழ்கிறார்.

திரு. சீனிவாசன் அவர்களுடைய மேலாண்மை திறமையாலும், உழைப்பாலும், இந்தியாவில் 7 இடங்களில் இந்த நிறுவனம் தனது ஆலைகளை நிறுவியிருக்கிறது. இந்த நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்படும் சிமெண்ட் சங்கர், கொரமண்டல் மற்றும் ராசி கோல்டு என்ற பெயர்களில் விற்பனை செய்யப்படுகிறது. இந்த நிறுவனம், சிமெண்ட் தொழில் மட்டுமல்லாமல். அத்தொழிலுடன் தொடர்புடைய RML Tanks, Captive Power, Waste Heat Recovery System, Wind Power, Shipping, Sugar மற்றும் Coal Mines போன்ற தொழில்களிலும் தன் கால்களை பதித்து இருக்கிறது.

The Company started employing Cricketers as early as 1965, when there was no security of jobs for any of the sports persons. The company also encouraged other games and sports personalities in Tennis, Ball Badminton, Golf, Squash and Triathlon by way of providing employment and extending sponsorships for conducting tournaments. The galaxy of cricketers present here is an evidence of the contribution of India Cements and Thiru. N.Srinivasan for Cricket. It is apt to mention here that as per announcement made during the 'Independence Day' address, my Government will be implementing the 3% reservation in employment to the sports

persons who have excelled in Sports, in Government and Government undertakings shortly.

திரு சீனிவாசன், மதராஸ் வர்த்தக சபை, FICCI, சிமெண்ட் உற்பத்தியாளர் சங்கம், தேசிய சிமெண்ட் மற்றும் கட்டடப் பொருள்கள் உற்பத்தியாளர் சங்கம், மத்திய அரசால் அமைக்கப்பட்ட சிமெண்ட் தொழிற்சாலைக்கான வளர்ச்சிக் குழு போன்ற பல்வேறு அமைப்புகளில் உயர் பதவிகளை வகித்தவர் என்பதை அறிவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு. சீனிவாசன் அவர்களின் ஆளுமை, நிர்வாகத் திறமை, சிறந்த தொழில் அதிபர், விளையாட்டுத் துறையில் சிறந்த நிர்வாகி, நல்ல குடும்பத் தலைவர் என்ற இவரது பன்முக ஆற்றலை இந்த Coffee Table book நமக்கு தெளிவுபடுத்துகிறது.

இந்தியா சிமெண்ட் நிறுவனம் IPL-ல் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளராகவும் உள்ளது.

இது தவிர, இந்த நிறுவனம் TNPL என்று அமைப்பினை ஏற்படுத்தி தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்கள் மற்றும் கிராமப்புறங்களில் கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வமுள்ள இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் போட்டிகளை நடத்தி வருகிறது என்பதையும் அறிவேன். இதன் மூலம் கிரிக்கெட் விளையாட்டில் தமிழ்நாட்டிலுள்ள இளைஞர்களின் திறன் வெளிக்கொணரப்பட்டு, அவர்கள் மாநில அளவிலும், இந்திய அளவிலும் உள்ள அணியில் இடம் பெறும் நாள் வெகுதூரத்தில் இல்லை. இந்த செயலுக்காக திரு. சீனிவாசன் அவர்களை பாராட்டுகிறேன்.

தொழில்நுட்பவியல், சுகாதாரம், நிதி மற்றும் சுற்றுலா போன்ற இளந்தலைமுறையினரை ஈர்க்கும் துறைகளில் மாண்புமிகு அம்மாவின் அரசு அதிக அக்கறை எடுத்துக் கொண்டு பணிபுரிந்து வருகிறது. சமீபத்தில் புதுடில்லியில் நடந்த விழாவில், 'இந்தியா டுடே' பத்திரிகை, ஒட்டுமொத்த செயல்பாடு, சட்டம் ஒழுங்கு மற்றும் சுற்றுலா ஆகிய பிரிவுகளில் தமிழ்நாட்டை

சிறந்த மாநிலமாக தேர்வு செய்து, விருதுகளை வழங்கியுள்ளது. தமிழ்நாட்டின் சார்பில் அந்த விருதுகளை நான் பெற்றுக் கொண்டதை பெருமையாக கருதுகிறேன்.

தமிழ்நாட்டில் அதிக அளவில் தொழில் முதலீட்டாளர்கள் வருகை புரிவதற்கு அடிப்படை காரணம், தமிழ்நாட்டிலுள்ள வலுவான மனிதவளம், தடையில்லா மின்சாரம் மற்றும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளும் தான். மேலும் அந்நிய நேரடி முதலீடுகளை அதிக அளவில் ஈர்ப்பதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

Recently, we have formulated a new **Environment Policy, an Eco-Tourism Policy, an Information Communication Technology Policy, State Forest Policy, Youth Policy and Food Processing Policy.** Policies in other critical sectors will also be announced to provide clarity and guidance to investors.

The Tamil Nadu **Business Facilitation Act, 2018,** has ensured that business enterprises are given mandatory clearances within 30 days, failing which deemed clearances are accorded. Following up on the success of the Global Investors Meet held in 2015, the next Global Investors Meet is to be held on **23rd and 24th January, 2019** in Chennai.

I take this opportunity to invite captains of industry and entrepreneurs gathered here to participate in the Global Investors Meet being organised in Chennai next month and to take advantage of the ideal investment climate prevailing in the State.

The State also has new generation industries in the service sectors like IT, health care, financial services, hospitality and tourism.

Tamil Nadu has a rare model of development, which is business friendly, even as it ensures that adequate attention and funding is provided for welfare of its people.

Tamil Nadu has thus, created its own inclusive Growth Model which **Offers everying for everyone as** promised by my mentor Puratchi Thalaivi Amma.

My Government has cleared projects worth sixteen thousand crore rupees of 13 Companies, recently. This will help to create over thirty four thousand jobs.

திரு. சீனிவாசன் அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து இந்த நாட்டிற்கும் குறிப்பாக தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், புதிய விளையாட்டு வீரர்களை உருவாக்கும் வகையிலும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றுள்ள பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களுக்கும், வருகை தந்துள்ள அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியை கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**